மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற கஷ்டமே அது தான். சாதாரணமாக, நம்முடைய நிலப்பரப்பிலே மூன்றிலே ஒரு பகுதி காடுகளாக இருக்கவேண்டுமென்று உலக விஞ்ஞானி கள் நமக்குக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் குறிப் பாக நம்முடைய மாநிலத்தில் 16 சதவீதம் கூட காட்டுப்பகுதிகள் இல்லை. இருந்த காடுகளும் அழிக்கப்பட்டுக் கொண்டு வந்து விட்டன. மீண்டும் அப்படிப்பட்ட பகுதிகளிலே மரம் வளர்க்கின்ற திட்டங்களைக் கடந்த சில ஆண்டுகளாக வனத்துறையும் அரசும் மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டு மத்திய அரசும் மாநில அரசும் பல்வேறு திட்டங்களின் மூலம் நிறைவேற்றிக் கொண்டு வருகின்றோம். இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் அந்தப் பகுதியிலே நாம் ஏழை, எளிய மக்களுக்கு வாய்ப்பினைத் தந்து, அவர்களை அங்கு அனுப்பும்போது, அவர்கள் அந்த மரம் வளர்க்கும் திட்டத்தைப் பாழாக்கும் முயற்சியிலே சில நேரங்களில் ஈடுபட்டு தங்களுடைய பயிர்களுக்குப் பாதகமாக இருக்கிறது என்று நடப்பட்டிருக்கின்ற மரங்களையும் பிடுங்கி எறிந்து விடு கின்றார்கள் என்ற செய்திகளும் வருகின்றன, உண்மையாகவும் சில நேரங்களிலே நடந்து விடுகின்றன. இதையெல்லாம் கருத்திலே வைத்து, காடுகளும் வளர்க்கப்பட்டாக வேண்டும், காடுகளும் பாதுகாக்கப்பட்டாக வேண்டும். ஏழை, எளிய மக்களுக்கும் வாழ்க்கை தரவேண்டுமென்ற இத்தனை அடிப்படை பிரச்னை களை மனதிலே வைத்து அரசு கவனமாகப் பரிசீலித்து முடிவெடுக்கும்.

கீரிப்பாறை பகுதியில் மூங்கில் ஏலம்

*வினா எண் 129 திரு. டி. மணி. மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்தில் கீரிப்பாறை பள்ளக்குளம் பேச்சுப் பாறைக்கு அருகாமையில் சேப்பலத்தோடு மற்றும் பகுதி களிலிருந்து மூங்கில்கள் 1979—80ம் ஆண்டில் ஏலம் விடப்பட்டு உள்ளதா?

(ஆ) ஏலம் விடப்பட்டுள்ள தொகை எவ்வளவு

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்

(ஆ) ரூபாய் 3,39,001/—

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் கீரிப்பாறை பள்ளக்குளம் பேச்சுப்பாறைக்கு அருகாமையிலுள்ள காடுகளிலிருந்து மூங்கில்களை வெட்ட என்ன விதிமுறைகள் உள்ளன? எந்தக் கால அளவில் எவ்வளவு வெட்டிக்

1981 ஜனவரி 31]

சேர்க்க வேண்டும். அந்தக் கால அளவிற்குள் மூங்கில்களை வெட்டி எடுக்காமல், மூங்கில்களை வெட்ட அந்தக் கால அளவு நீட்டிக்கப்பட்டு உள்ளதா? அப்படி மூங்கில்களை வெட்டிக் கொடுத்திருந்த கால அளவை நீட்டித்துக் கொடுப்பதில், அங்குள்ள வனத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ஊழல் புரிந்த தாகப் புகார் வந்துள்ளதா? அதில் என்ன நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி, ஏலம் விடப்பட்டதா என்பதும், விடப்பட்டிருந்தால் தொகை எவ்வளவு என்பதும்தான் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கான பதிலை நான் தந்திருக்கிறேன். அப்படி ஏலம் விடுகிறபோது சில விதிகளுக்குட்பட்டுதான் ஏலம் விடுவது வழக்கம். இவ்வளவு காலத்திற்குள்ளாக வெட்டியாக வேண்டும் என்ற நிபந்தனை தருவது உண்டு. அதிலே அவர்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு சங்கடங்கள் காரணமாக கால நீட்டிப்புக் கேட்பார்களேயானால் வனத் துறை அவர்களுக்கு என்று இருக்கிற அதிகாரத்திலே முதலிலே ஒரு கால நீட்டிப்பு வழங்குவார்கள். அதற்கு மேலும் கேட்டால் அது அரசுக்கு வரும். அப்படி அரசுக்கு வருகிறபோது அதற்காக சில பெனால்டி என்றெல்லாம் அவர்களுக்குப் போட்டு கால நீட்டிப்பு கொடுப்பது வழக்கம். அவர்களுக்கு உண்மையிலேயே சங்கடங்கள் நேர்ந்து வெட்டமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதா என்பதை ஆராய்ந்து, கால நீட்டிப்பு கொடுக்கும் வழக்கமும் இருந்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஏலத்தில் அல்லது அந்த ஏலதாரர் களிடம் தவறுகள் நிகழ்ந்திருக்கின்றன என்ற தகவலைத் தருவார்களேயானால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது கால நீட்டிப்பு கொடுக்கப்பட்டதா என்ற விவரம் என்னிடத்திலே இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. டி, மணி: தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அந்த ஒப்பந்தக்காரர்களுக்குச் சங்கடங்கள் ஏற்பட்டால் அதை மாற்றிக் கொடுப்பார்கள் என்று சொன்னார்கள். ஆனால் நடந்து இருக்கின்ற நிலமையே வேறு விதமாக இருக்கின்றது. இந்த மூன்று பண்ணைகளில் ஒரு பண்ணையில் பக்குவம் ஆவதற்கு இடையிலேயே மூங்கில்களை வெட்டி இருக்கிறார்கள். பொதுவாக பக்குவமான மூங்கில் களையே வெட்ட வேண்டும் என்றும் 2 அல்லது 3 அடிக்கு மேல் வெட்ட வேண்டும். மேலும் பக்குவம் ஆகாமல் இருக்கின்ற இளம் கன்றுகளை வெட்டக் கூடாது என்றும் விதி இருக்கிறது. அதற்கு மாறாக ஒரு ஆண்டிற்குள்ளாக மூன்று தடவைகள் அந்த இளம் கன்றுகள் வெட்டி எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் நேரிலேயே பார்த்ததனால், இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே இப்படிப்பட்ட அந்த இளம் கன்றுகளை வெட்டி எடுப்பதற்கு அந்த பகுதியிலே இருக்கிற வன இலாகாவினருக்கு ஒரு லட்சம் ரூபாய் லஞ்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை விசாரித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் புகார்களோ குற்றச்சாட்டுகளோ சொல்லக் கூடாது என்று விதி இருக்கிறது. நீங்கள் புகார் கொடுப்பதாக இருந்தால் முதலிலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டும். அப்படி தெரிவித்த பிறகுதான் இந்த அவையிலே சொல்ல வேண்டும். அப்படி இல்லாமல், கேள்வி நேரத்தில் அவர்கள் லஞ்சம் வாங்கினார்கள் என்றால் எந்த ஆதாரத்தை வைத்து அமைச்சர் பதில் சொல்ல முடியும்? இந்தக் கேள்வியை சம்பந்தப்பட்ட வரையில் கேளுங்கள். உங்களிடம் பல பல தகவல்கள் இருக்கலாம். அதை வெளியிடுவதற்கு வெவ்வேறு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அந்தச் சந்தர்ப்பங்களில் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் எண்ணங்கள் பூராவையும் சொல்வதற்கு மிகுந்த அவகாசங்கள் இருக்கின்றன. எனவே கேள்வி நேரத்தில் அதைப் பயன்படுத்தக் கூடாது.

திரு டி. மணி: தலைவர் அவர்களே, அந்த மூங்கில் பக்குவம் ஆவதற்கு இடையிலேயே வெட்டி இருக்கிறார்கள். இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல தவறுகள் நிகழ்ந்திருக்குமானால் குற்றங்கள் நிகழ்ந்திருக்குமானால் அரசு உடனடியாக பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அனுமதிக்கப் பட்டதற்கும் அதிகமாக மூங்கில் வெட்டப்பட்டது என்று அரசுக்குப் புகார்கள் வந்திருக்கின்றனவா, அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து புகார்கள் தினசரி வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே எந்தப் புகார், எப்போது, எதைப்பற்றி வந்திருக்கின்றது என்பதை நினைவிலே வைத்துக் கொள்ள முடியாது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் பல்வேறு நேரங்களில் புகார்கள் எழுதித் தந்து அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆணை இடப் பட்டிருக்கிறது. ஒருவேளை இந்தச் சட்டமன்ற உறுப்பினர் இந்தப் புகாரை முன்னாலேயே தெரிவித்து இருப்பார்களே யானால், அதன் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவேளை இப்போது தான் இதைப்பற்றி தெரிவிக்கிறார் என்றால், உடனடியாக இதைப்பற்றி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படும்.